www.tamilarangam.net

இந்த துரோகிகள் தம் சொந்தமக்கள் பற்றி யேர்மனியப் பொலிசுக்கு காட்டித்தருவதை எந்தப் பெயரால் அழைப்பது?

1994 இல் பாரிஸ நகரில் சமூக உணர்வாளரும் இலக்கியவாதியுமான சபாலிங்கம் கொல்லப்பட்டார். இவரைக் கொன்ற புலி கொலையாளியான பிரகலாதன் ரத்தினவேல் (வயது 31) கனடாவில் பொலிசாரிடம் பிடிபட்டபோது பாரிசிலும் லண்டனிலும் நடத்திய துவக்குச் சூடுகளை ஒப்புக்கொண்டுள்ளார். இவர் பரிசில் சுக்ளாவுடன் சேர்ந்து சபாலிங்கத்தையும் லண்டனில் கனசபை சோம்ராஜ் என்பவரையும் சுட்டதாய் தானே வாக்குமூலம் கொடுத்துள்ளார். புலிகள் தவிர வேறு எவரும் சங்கம் அமைப்புக்கள் அரசியல் கலை இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தமுடியாத காலம் ஒன்று இருந்தது. பத்திரிகை சஞ்சிகை வெளியிட முடியாத கொடுங்கோன்மை நிலவியது. ஆனால் இப்போது தமிழ்மக்கள் மத்தியில் புகலிடத்தில் சுதந்திரமான பத்திரிகைகள், சஞ்சிகைகள், தமிழ்வானொலிகள், தொலைக்காட்சிகள், அரசியல்,இலக்கிய, கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கிவிட்டன. இனிப் புலிகளால் அவைகளை முன்பு போல் கட்டுப்படுத்த முடியாது தாம்வாழும் நாட்டின் மொழியோடும் பலகலாச்சாரப்போக்குகளோடும் அறிமுகமுள்ள ஒரு தலைமுறையும் இளம் சந்ததியும் உருவாகி வருகிறது. இது புலிகளின் குறுகிய வேலிகளை புகலிடவாழ்வுக்குப் பொருத்தமற்ற தமிழ்போக்கின் கிணற்றுத் தவளைப் போக்கை உடைக்கத் தொடங்கிவிட்டது. மறுபுறம் தமிழ்பழமைவாதிகள் கோவில் கட்டி கும்பாபிசேகம் செய்வதில் இறங்கிவிட்டனர். தமிழ்சசமூகம் பல திக்கிலும் சிதறத்தொடங்கிவிட்டது. இனிமேலும் புகலிடச்தமிழ்ச் சமூகத்தை தன் பிடியுள் புலிகளால் வைத்திருக்கமுடியாது. புலியின் புகலிடம் மேலான ஆக்கிரமிப்பு இனி மெல்லச் சாகத் தொடங்கும்.

முடிவாக TBC இன் மேலான புலிவன்முறையானது தளரத் தொடங்கியுள்ள தன்பிடியை புகலிடத்தமிழ்மக்கள் மேல் மீண்டும் நாட்டமுயலும் புலியின் பிரயாசையாகும் திமிறமுயலும் புகலிடத்தைக் கட்டி வைக்க முயலும் முயற்சியாகும்.

மறுபுறம் TBC மற்றும் வான்முரசுபத்திரிகையின் கருத்து,எழுத்து,பேச்சு சுதந்திரத்திற்காக எந்த இடறுபாடுமின்றிக் குரல் தரும் நாம் அவர்களின் சந்தர்ப்பவாதத்தையும் புலிகளிடம் மீண்டும் மீண்டும் பாவமன்னிப்புக் கோருவதையும் சரணாகதியடைய முயல்வதையும் புலிகளின் வன்முறைக்கும் மனிதவிரோதத்திற்கும் கடந்த காலங்களில் துணைபோனதையும் நடுச்சந்தியில் போட்டுடைக்கத் தவறக்கூடாது தமிழ் மக்கள் மத்தியில் விமர்சித்து, வாதிட்டு, கருத்துப்பரிமாறி வாழும் கலாச்சாரத்தை படைக்கவேண்டும். ஏகாதிபத்தியத்தையும் சிறிலங்கா அரசையும் மட்டுமல்ல புலிகளையும் விசாரணை செய்யும் துணிவைப் பெறவேண்டும்.

**அரசியல் கலை இலக்கியவட்டம், ஜேர்மனி**

**05.07:2001**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்